மாணவர் மன்றம், சென்னை

(மயிலை சிவமுத்து நிலையம்)

தொடக்கம் : 1931 – பதிவு பெற்றது : 52 / 1952]

41, இப்ராகிம் தெரு, சென்னை – 600 001

இணையதளம்: www.manavarmandram.in

தொலைபேசி : 044-2525 1587, கைப்பேசி : 94451 11587

தமிழ்த் தேர்வுகள் – 2027

பெருந்தகையீர், வணக்கம்.

மாணவர்கள் பயன்பெறும் வகையில் 10, 12ஆம் வகுப்பிற்கு மாணவர் மன்ற முன்மாதிரித் தமிழ்த் தேர்வுகள் நடத்தப்படும்.

ஆண்டு தோறும் மன்றத் தமிழ்த் தேர்வுகள் சீரிய முறையில் நடைபெற ஊக்கம் தந்து உதவிய முதல்வர்கள், தலைமை ஆசிரியர்கள், தமிழாசிரியர்கள் அனைவருக்கும் நன்றி.

இவ்வாண்டும் அதேபோல் மாணவர்கள் மன்றத்தேர்வில் கலந்துகொள்ள உதவுமாறு வேண்டுகிறோம்.

தேர்வுகள் நடைபெறும் நாள்

பத்தாம் வகுப்பு (S.S.L.C.) / மெட்ரிகுலேசன் (10ஆம் வகுப்பு) சனிக்கிழமை 30.01.2027

முற்பகல் 10 மணிமுதல் 1.00 மணிவரை

பன்னிரண்டாம் வகுப்பு (+2) / மெட்ரிகுலேசன் (12ஆம் வகுப்பு) சனிக்கிழமை 30.01.2027

முற்பகல் 10 மணிமுதல் 1.00 மணிவரை பொதுத்தமிழ் தாள்

பாடத்திட்டம்

1. பத்து, பன்னிரண்டு ஆகிய வகுப்புகளுக்கு அரசுப் பொதுத் தேர்வுக்குரிய தமிழ்ப் பாட நூல்களே மன்றத் தமிழ்த் தேர்வுகளுக்கும் பாட நூல்களாகும்.
2. அரசுப் பொதுத்தேர்வுக்குரிய தமிழ் வினாத்தாள்களைப் போன்றே மன்ற வினாத்தாள்களும் அமையும்.

பரிசுகள்

பத்தாம் வகுப்புத் தமிழ்த் தேர்வில் மாநிலத்தில் முதல் மூன்று இடங்களுக்கான பரிசுகள்

முதற்பரிசு ரூ. 1000/– இரண்டாம் பரிசு ரூ. 700/– மூன்றாம் பரிசு ரூ. 500/–

பன்னிரண்டாம் வகுப்புத் தமிழ்த் தேர்வில் மாநிலத்தில் முதல் மூன்று இடங்களுக்கான பரிசுகள்

முதற்பரிசு ரூ. 1200/– இரண்டாம் பரிசு ரூ. 1000/– மூன்றாம் பரிசு ரூ. 800/–

தேர்வுகளில் நூற்றுக்கு 60உம் அதற்கு மேலும் மதிப்பெண் பெறுபவர்க்கு முதல் வகுப்பு நன்மதிப்பிதழும், 50முதல் 59வரை மதிப்பெண் பெறுபவர்க்கு இரண்டாம் வகுப்பு நன்மதிப்பிதழும், 35முதல் 49வரை மதிப்பெண் பெறுபவர்க்கு மூன்றாம் வகுப்பு நன்மதிப்பிதழும் வழங்கப்பெறும்.

ஒவ்வொரு பள்ளியிலும் பத்து, பன்னிரண்டாம் வகுப்புகளில் முதல் மதிப்பெண் பெறும் மாணவர்களுக்குத் தமிழ் நூல்கள் பரிசாக வழங்கப்படும். பத்தாம் வகுப்பு, பன்னிரண்டாம் வகுப்பு மன்றத் தமிழ்த் தேர்வுகளில் மாநில அளவில் முதல் மதிப்பெண் பெற்ற மாணவர்கள் மன்ற ஆண்டு விழாவில் சிறப்பிக்கப் பெறுவர்.

தேர்வுக்கட்டணம்

பத்தாம் வகுப்பு (S.S.L.C.) மெட்ரிக் பத்தாம் வகுப்பு	ரூ. 40.00
பன்னிரண்டாம் வகுப்பு / மெட்ரிக் பன்னிரண்டாம் வகுப்பு	ரூ. 40.00

தேர்வுக் கட்டணமும் விண்ணப்பமும் அனுப்ப வேண்டிய இறுதி நாள் **09.01.2027** சனிக்கிழமை

– திருப்புக

தேர்வுச் செலவு

தேர்வுக் கட்டணத் தொகையில் 20% விழுக்காடு தேர்வுச் செலவுக்கெனப் பிடித்துக் கொண்டு எஞ்சிய தொகையை அனுப்புதல் வேண்டும். மன்றத் தேர்வு மேற்பார்வையாளர் அன்பளிப்பு, விடைத்தாள்களைத் தேர்வாளர்கட்கு அனுப்பி வைக்கும் பார்சல் செலவு, தேர்வு சமயத்தில் உதவும் பணியாளர் அன்பளிப்பு ஆகிய செலவுகள் யாவும் தேர்வுச் செலவில் அடங்கும்.

தேர்வு எழுதுவதற்குரிய விடைத்தாள், தேர்வுக் கட்டணம் போன்ற செலவுகளுக்கு மாணவர்களிடமே பணம் பெற்றுக்கொள்ள வேண்டும்.

விடைத்தாள் திருத்த அன்பளிப்பு

பத்தாம் வகுப்பு	ஒரு தாளுக்கு	ரூ. 6.00
பன்னிரண்டாம் வகுப்பு	,,	ரூ. 6.00

தேர்வு நிகழும் இடம்

10, 12ஆம் வகுப்புத் தேர்வில் கலந்து கொள்ளும் மாணவர்கள், தனித்தனியே ஒவ்வொரு வகுப்பிலும் இருபது மாணவர்களுக்குக் குறையாமல் இருந்தால் விண்ணப்பம் அனுப்ப வேண்டும். அவர்கள் பயிலும் பள்ளியையே தேர்விடமாக வைத்துக் கொள்ளவேண்டும். இருபதிற்குக் குறைவாக மாணவர்கள் உள்ள பள்ளியினர் விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டா.

தேர்வுக் கட்டணம், விண்ணப்பம் அனுப்பும் முறை

குறிப்பிட்ட காலம் கடவாமல் விண்ணப்பங்களையும், தேர்வுக் கட்டணத் தொகையையும் அனுப்பித் தேர்வுப் பணி சிறக்க ஒத்துழைக்க வேண்டும்.

இந்தியன் வங்கிக் கணக்கு எண் : 460685647, IFSC எண் : IDIB000M016, சென்னை – மண்ணடி என்ற வங்கிக் கணக்கில் தேர்வுக் கட்டணத்தைச் செலுத்தலாம். காசோலையாகவோ (Cheque) கேட்போலையாகவோ (Demand Draft) **Manavar Mandram, Chennai - 1** என்று குறிப்பிட்டு, விண்ணப்பத்துடன் இணைத்தும் ஒரே உறையில் மாணவர் மன்ற முகவரிக்கு அனுப்பி வைக்கலாம்.

காசோலையாகவோ, கேட்போலையாகவோ அனுப்பி வைக்கும்போது, பள்ளி முகவரியையும் எந்த வகுப்பில், எத்தனை மாணவர்கட்குரிய கட்டணம் என்பதையும் தவறாமல் குறித்து ஒரு கடிதம் இணைத்து அனுப்புக. விண்ணப்பத்தையும், கட்டணத்தையும் நேரிலும் தரலாம். தேர்வு நாளினை மாற்றம் செய்ய இயலாது. முழுக்கட்டணத்துடன் வரும் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். எக்காரணத்தை முன்னிட்டும் தேர்வுக் கட்டணத்தைத் திருப்பி அனுப்ப இயலாது.

இன்றியமையாத குறிப்புகள்

1. விண்ணப்பங்கள் அனுப்பிய பின்னர் குறிப்பிட்ட மாணவர்கட்குப் பதிலாக வேறு மாணவர்களை மாற்றிக் கொள்வதோ, தேர்வின்போது புதிய மாணவர்களைச் சேர்ப்பதோ கண்டிப்பாக அனுமதிக்கப்பட மாட்டாது.
2. அந்தந்த வகுப்புத் தேர்வுகட்குரிய விண்ணப்பப் படிவங்களில் மாணவர்கள் பெயர்களைப் பதிவு செய்ய வேண்டும். மாற்றி எழுதுதல் கூடாது.
3. ஒவ்வொரு வகுப்பிலும் கலந்துகொண்ட மாணவர்களின் எண்ணிக்கை, அனுப்பிய தொகை ஆகியவற்றை விண்ணப்பப் படிவத்திலுள்ள கட்டத்தில் குறிக்க வேண்டும்.
4. திருத்தம் செய்வதற்குரிய விடைத்தாள்களைத் தங்களுக்கு அனுப்புவதற்கு வேண்டிய முகவரியைத் தெளிவாகக் குறிப்பிடவும். கூரியர் / அஞ்சல் நிலையம் ஆகிய இவற்றுள் தங்கள் பள்ளிக்கு அண்மையில் உள்ளதைக் குறிப்பிடவும்.
5. தேர்வு முடிந்தவுடன் விடைத்தாள்களை மன்றம் அறிவிக்கும் தேர்வாளர் முகவரிக்கு கூரியர் / அஞ்சல் வழி அனுப்ப வேண்டும். மன்ற முகவரிக்கு அனுப்பவேண்டாம். விடைத்தாள் கட்டினை அனுப்பிய விவரத்தினை மட்டும் மன்றத்திற்கு அறிவித்தல் வேண்டும்.
6. தங்களுக்குத் திருத்தம் செய்ய வேறு பள்ளியிலிருந்து வரும் விடைத்தாள்களைத் திருத்தம் செய்தபிறகு, மதிப்பெண் பட்டியலையும், பணம் பெறுவதற்கான பற்றுச் சீட்டினையும் நிறைவு செய்து, முதல் மதிப்பெண் பெற்ற மாணவனின் விடைத்தாளை மட்டும் சேர்த்து மன்றத்திற்கு விரைந்து அனுப்புக.
7. திருத்தம் செய்த விடைத்தாள்களைத் தாங்களே பாதுகாப்பாக வைத்துக் கொள்ளவும். மன்றம் கேட்கும்போது பதிவில்லாத பார்சல் மூலம் அனுப்பி வைக்கவும்.
8. தேர்வு முடிவுகள் அகத் தேர்வு தொடங்குவதற்கு முன்பு அறிவிக்கப்பெறும். நன்மதிப்பிதழ்களும், நூல் பரிசுகளும் தொடர்ந்து அனுப்பப்பெறும். மாநிலப் பரிசுகள் கோடை விடுமுறை கழித்து அனுப்பி வைக்கப்பெறும்.

ப. கி. பொன்னுசாமி	சீனி. சோமசுந்தரம்	வெ. மணிவாசகம்
தலைவர்	வே. பக்தவச்சலம்	ஸ்ரீ. சீ. கமலக்கண்ணன்
பொன். இளங்கோவன்	இணைச்செயலாளர்கள்	செயலாளர்கள்
பொருளாளர்		